(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 1 (2)]**

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2008, யூலை 11, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2008, யூலை 22, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 112, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் இரண்டாயிரத்து என்னூற்று எண்பது மில்லியன் ஒரு இலட்சத்து எண்பதாயிரத்துமுன்னூற்றி முப்பத்தி இரண்டு (ரூபா 2,880,180,332) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு 112 — | வெளிநாட்டலுவல்கள் அமைச்சு | | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — அபிவிருத்தி நடவடிக்கைகள் | | |
| | மீண்டுவரும் செலவினம் | ரூ. | 401,881,272 |
| | மூலதனச் செலவினம் | ரூ. | 2,478,299,060 |
| | மொத்தம் | ரூ. | 2,880,180,332 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2008, யூலை மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 2 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 318,000,000

*

கலாச்சார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 142, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் பதினெட்டு மில்லியன் (ரூபா 18,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு 142 — | கலாச்சார அலுவல்கள், | | ரூபா |
| | தேசிய மரபுரிமைகள் அமைச்சு | | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — அபிவிருத்தி நடவடிக்கைகள் | | |
| கருத்திட்டம் 3 | — சமூக கலாசாரம் இணைந்து செயற்படல் | | |
| | மீண்டுவரும் செலவினம் | ரூ. | 18,000,000 |
| | மொத்தம் | ரூ. | 18,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2008, யூலை மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 3 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 3,198,180,332

*

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர்,— விலங்கின, தாவர பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) விலங்கின, தவர பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (அ) ஆம் பந்தியினால் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 ஏப்ரில் மாதம் 28 ஆந் திகதிய 1547/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2008, ஓகத்து 06, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0627/ '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) மாத்தளை மாவட்டத்தின் இரத்தோட்டை பொலிஸ் அதிகார பிரிவைச் சேர்ந்த இரத்தோட்டை நகரத்தின் "அனோமா" இல்லத்தில் வசித்து வந்த திரு. சரத் காமிணி வியனகே உட்பட அவரது மனைவி மற்றும் மகள் ஆகியோர் 2004 செத்தெம்பர் மாதம் முதல் காணாமல் போயுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அரசியல் கட்சியொன்றின் தீவிர ஆதரவாளரான திரு. சரத் காமிணி வியனகேவுக்கு 2004 பொதுத் தேர்தலுக்குப் பின்பு மரண அச்சுறுத்தலும் பலவிதமான தாக்கங்களும் ஏற்படுத்தப்பட்டன என்பதையும்,

(ii) இது சம்பந்தமாக இரத்தோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) திரு. சரத் காமிணி லியனகேயும் அவரது குடும்ப உறுப்பினர்களும் தற்போது உயிருடன் உள்ளார்களா என்பதையும்,

(ii) ஆமெனில், எவ்விடத்தில் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0647 / '08

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரு மானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) குருணாகல் மாவட்டத்தின் கொபெய்கனே பொலிஸ் நிலையத்திற்கு 2006.01.01 ஆம் திகதி தொடக்கம் 2007.01.01 ஆம் திகதி வரை கிடைத் துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(ii) இம் முறைப்பாடுகளும் விசாரிக்கப்பட்டு, தீர்ப்புகள் வெளியிடப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை மற்றும் விசாரிக்கப்படாத முறைப்பாடு களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி விசாரிக்கப்படாத முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற திகதி, முறைப் பாட்டினைப் பொறுப்பேற்ற உத்தியோகத்தரின் பெயர், முறைப்பாட்டின் தன்மை, மற்றும் விசாரிக்கப்படாமைக்கான காரணம் ஆகியவற்றை ஒவ்வொரு முறைப்பாட்டுக்கும் உரியதாக வெவ்வேறாக அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) மேற்படி முறைப்பாடுகள் விசாரிக்கப்படாமை தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0648 / '08

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) குருணாகல் மாவட்டத்தில் 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப் படுத்த திட்டமிடப்பட்டிருந்த விசேட மின்சார திட்டங்கள் இருக்கின்றனவா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(அ) (i) அந்தக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் அவற்றின் விபரங்களையும்,

(ii) இந்தக் கருத்திட்டங்களுக்கு பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) அந்த ஒவ்வொரு திட்டத்தினதும் பணிகள் எப்போது பூர்த்தி அடையும் என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0670 / '08

கௌரவ சமன்சிறி ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) நவகம்தேகம, வெலேவெவ, 40 ஆம் இலக்கத்தில் வதியும் எம். ஜே. எஸ். ரஞ்சித் என்பவர் 1989.06.15 ஆம் திகதி முதல் பொலிஸ் கான்ஸ்டபிளாக சேவையில் இணைந்து கொண்டாரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) வென்னப்புவ பொலிஸ் பயிற்சி கல்லூரியில் ஈடுபட்டிருந்தபோது திடீரென இவரின் நியமனம் இரத்து செய்யப்பட்டதற்கு காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) 1992.04.10 ஆம் திகதி திரு. ரஞ்சித் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டமைக் கான காரணம் ஏற்கனவே இவரின் நியமனம் இரத்து செய்யப்பட்டமை அநீதியானதென கருதப்பட்டமையினாலா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேதகு சனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய 16 வருடத்திற்கு மேல் பொலிஸ் சேவையில் கடமையாற்றியிருக்கும் பதவி உயர்வு பெறாதவர் களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கான தீர்மானத்திற்கிணங்க 2006.02.23 ஆம் திகதி பொலிஸ் சார்ஜன்ட் பதவிக்கு பதவிஉயர்வு பெற்ற இவர் 2007.07.30 ஆம் திகதி முதல் உடனடியாக அமுலுக்கு வருமாறு பதவி இறக்கம் செய்யப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்,

(ii) இவருக்கு எதிராக ஒழுக்காற்று குற்றச்சாட்டு ஏதேனும் இருக்குமாயின் அது யாதென்பதையும்,

(iii) இவரது நியமனத் திகதி 1989.06.15 ஆம் திகதியென பொலிஸ் திணைக் களம் அங்கீகரித்திருந்தும் பதவி உயர்வு வழங்கப்படும் போது 1992.08.01 ஆம் திகதி முதல் சேவைக்காலம் கணிக்கப்பட்டமை எவ்வாறு நிகழ்ந்ததென் பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(உ) திரு. ரஞ்சித்திற்கு நியாயத்தை பெற்றுத்தருவதற்கு அவர் தேவையான நடவடிக் கைகளை மேற்கொள்வாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

## 2008, ஓகத்து 07, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0535 / '08

கௌரவ அநுர திஸாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தேசிய கல்வி நிறுவகத்திற்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள மீண்டெழும் செலவுகள் மற்றும் மூலதனச் செலவுகள் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி வருடங்களுக்காக ஒதுக்கப்பட்ட மூலதனச் செலவுகளின் செலவு விடயங்கள் யாவை என்பதையும்,

(iii) குறிப்பிட்ட வருடத்தில் நிதி முன்னேற்றம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(அ) (i) இந் நிறுவகத்திற்கு ஏனைய அமைப்புகள் ( உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற) மற்றும் நிறுவனங்கள் மூலம் மேற்படி வருடங்களில் வழங்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) இந் நிறுவனங்களினால் எக் கருத்திட்டங்களுக்காக பணம் வழங்கப்பட்ட தென்பதையும்,

(iii) இக் கருத்திட்டங்களின் நோக்கங்கள் யாவை என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0666/ '08

கௌரவ சமன்சிறி ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பள்ளம பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கொலலிய வாவிக்கும் வாவியின் ஒதுக்குப் பிரதேசத்திற்கும் சொந்தமான முழுக்காணியின் பரப்பளவு எவ்வளவென்பதையும்,

(ii) இதன் மூலம் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படுகின்ற வயற்காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 1984 ஆம் ஆண்டில் கொலஎலிய வாவி புனரமைப்பதற்கு முன்னர் வாவிக்குள் மூழ்குவதாக இனங்காணப்பட்ட சதுப்பு நிலங்களின் பரப்பளவு எவ்வளவென்வதையும்,

(ii) இந்நிலங்களின் உரிமையாளர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி உரிமையாளருக்கு வாவியின் புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் படுவதற்கு முன்னர் சட்டரீதியாக மாற்றுக் காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஈ) அவ்வாறு மாற்றுக் காணிகளைப் பெற்றுக்கொண்ட வர்களின் பெயர்ப் பட்டியலையும், வழங்கப்பட்ட முழுக்காணியின் பரப்பளவையும், வழங்கப்பட்ட திகதியையும், இவ்விடயத்தில் ஈடுபட்ட நிறுவன உத்தியோகத்தர்களின் பெயர்க ளையும், வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(உ) மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டதன் பின்னரும் சதுப்பு நிலங்களுக்கு உரித்துடைய சிலரை அந்நிலங்களிலிருந்து அகற்றுவதற்கு இற்றைவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஊ) (i) மாற்றுக்காணிகள் வழங்கப்பட்டிருந்தும் இவர்களை வெளியேற்றாமல் இருப்பதற்கான காரணம் யாதென்பதையும்,

(ii) இக்காணிகளில் சட்டவிரோதமாக நிர்மாணப் பணிகளும், மின்கம்பி பொருத்துதலும் எவ்வாறு நிகழ்ந்ததென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(எ) இன்றேல், ஏன்

0668 / '08

கௌரவ சமன்சிறி ஹேரத்,— சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) சிலாபம் மாதம்பே பிரதேசச் செயலாளர் பிரிவில் நடாத்தப்படும் இந்திய கம்பனி யொன்றுக்குச் சொந்தமான "புவல்கா" என்றழைக்கப்படும் இரும்பு உருக்கும் தொழிற்சாலையின் கழிவுகள் அகற்றப்படும் இடம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அது தொடர்பாக சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கழிவுப் பொருட்கள் கலப்பதனால் அயலிலுள்ள கிணறுகளுக்கும் நிலக் கீழ் நீருக்கும் பாதிப்பேற்படுகின்றதென்பதையும்,

(ii) இத்தொழிற்சாலையிலிருந்து வெளிப்படும் புகைத்துகள்கள் அயல் பாகத்தில் சுமார் 4.5 கிலோமீற்றர் வரை பரவிச் செல்கின்றதென்பதையும்,

(iii) இது மக்களின் சுவாச நோய்கள் அதிகரிப்பதற்கு காரணமாகின்றதென்பதை யும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) இத்தொழிற்சாலையின் புகைத்துகள்கள் வெளிப்படுவதைக் கட்டுப்படுத்த உயர் நீதிமன்றத்தினால் நிருவாகிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டளைகள் யாவை,

(ii) அதன் பிரகாரம் தொழிற்சாலையின் நடவடிக்கைகள் மேற்பார்வை செய்யப் பட்டுள்ளதா,

(iii) அவ்வாறாயின் அது யாரினால், என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இதுவரை இத்தொழிற்சாலையினால் ஏற்படும் பாரிய சுற்றாடல் பாதிப்பை தவிர்ப்பதற்கு அவர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0602/ '08

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரு மானவரைக் கேட்பதற்கு,—

(அ) 1574 ஆம் இலக்க பஹல லப்பல கிராம உத்தியோகத்தர் பிரிவில் பெனிவெரலுவ கிராமத்தில் 2004 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலில் பிரதம குடியிருப்பாளர் இலக்கம் 430/76/01 இல் வசிக்கும் திரு. தென்ன கெதர உபுல் பிரியந்த ரன்வல உள்ளிட்ட குடும்ப அங்கத்தவர்கள் பிரதம குடியிருப்பாளர் இலக்கம் 430/176 இலும், பிரதம குடியிருப்பாளர் இலக்கம் 430/129 இல் வசிக்கும் திரு. அபேசிங்க முதியன்சேலாகே செனவிரத்ன உள்ளிட்ட குடும்ப அங்கத்தவர்கள் 430/243 ஆம் இலக்கத்திலும், பிரதம குடியிருப்பாளர் இலக்கம் 430/232 இல் வசிக்கும் திரு. நிபுணச்சாரி கணிதலாகே பிரேம ரஞ்சித் பிரதம குடியிருப்பாளர் இலக்கம் 430/165 இலும், பிரதம குடியிருப்பாளர் இலக்கம் 930/217 இல் வசிக்கும் திரு. ஜயசிங்க ஆரச்சிலாகே தினேஷ் பிரிய சுரங்க பிரதம குடியிருப்பாளர் இலக்கம் 430/63/01 இலும் இரட்டைப்பதிவுள்ளவர்கள் என்பதை அவர் அறிவாரா?

(அ) (i) இதன் மூலம் ஒரே நபருக்கு இரண்டு சந்தர்ப்பங்களில் வாக்களிக்க முடியுமாயுள்ளதென்பதையும்,

(ii) இதன் காரணமாக ஒரு சில அரசியல் கட்சிகளுக்கு அல்லது வேட்பாளருக்கு ஏதேனும் அநீதி நேரிடுமென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) இது தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டதா,

(ii) விசாரணையின் போது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் அடையாளர் காணப்பட்டார்களா,

(iii) அவ்வாறு அடையாளம் காணப்பட்டிருப்பின் அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், எதிர்காலத்தில் மேற்படி பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0134/ '08

கௌரவ லக்ஷமன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 தேர்தலில் அரசாங்கம் அதிகாரத்தைப் பெறுவதற்கு முன் கெஸ்பேவ பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருந்த

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2004 தேர்தலில் அரசு அதிகாரத்தை ஏற்றதன் பின் கெஸ்பேவ பிரதேச செயலகப் பிரிவில் இன்றுவரை உள்ள

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபின் மேற்படி பிரதேச செயலகப் பிரிவுக்குள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்கள், விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை யென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0135/ '08

கௌரவ லக்ஷமன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 தேர்தலில் அரசாங்கம் அதிகாரத்தைப் பெறுவதற்கு முன் கொழும்பு பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருந்த

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2004 தேர்தலில் அரசு அதிகாரத்தை ஏற்றதன் பின் கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில் இன்றுவரை உள்ள

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபின் மேற்படி பிரதேச செயலகப் பிரிவுக்குள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்கள், விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை யென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0136/ '08

கௌரவ லக்ஷமன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 தேர்தலில் அரசாங்கம் அதிகாரத்தைப் பெறுவதற்கு முன் கோட்டே பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருந்த

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2004 தேர்தலில் அரசு அதிகாரத்தை ஏற்றதன் பின் கோட்டே பிரதேச செயலகப் பிரிவில் இன்றுவரை உள்ள

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபின் மேற்படி பிரதேச செயலகப் பிரிவுக்குள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்கள், விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை யென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0628/ '08

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— வாழ்க்கைத்தொழில், தொழிற்பயிற்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, அரச சார்புடையதும் இலாபம் ஈட்டாததும் முழுமையாக அரச நிதியில் பராமரிக்கப்படுகின்றதும் கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்தின் கணக்காய்விற்கு உட்பட்டு நடத்தப்படுகின்றதுமானதொரு நிறுவனம் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) இந்த நிறுவனத்தின் தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படுவது 4/2005 ஆம் இலக்க பொதுநிருவாக சுற்றுநிருபத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய பிரசவ விடுமுறையன்றி, 3/2004 ஆம் இலக்க பொதுநிருவாக சுற்றுநிருபத்திற்கமைவான பிரசவ விடுமுறையே என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட 4/2005 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் மூலம் இரத்துச் செய்யப்பட்ட 03/2004 ஆம் இலக்க சுற்றுநிருபம் தொடர்ந்தும் இந்த நிறுவனத்திற்கு ஏற்புடையதாக இருப்பது எப்படி,

(ii) இது யாருடைய பணிப்புரை,

(iii) அவர் பொதுநிருவாக, சுற்றுநிருபத்தை மாற்றுவது எப்படி,

(iv) அதற்காக பொதுநிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அனுமதி பெறப்பட்டிருந்தால் எப்பொழுது பெறப்பட்டது,

(v) இன்றேல் உத்தியோகத்தரொருவதால் அமைச்சுக்கு அறிவிக்காமல் எடுக்கப்பட்ட தீர்மானமா,

(vi) இது அமைச்சின் பணிப்புரையாக இருப்பின் 4/2005 ஆம் இலக்க பொதுநிருவாக சுற்றுநிருபம் மாத்திரம் ஏற்புடையதாகாமல் ஏனைய பொதுநிருவாக சுற்றுநிருபம் ஏற்புடையதாவது எப்படி,

(vii) எதிர்காலத்தில் 04/2005 ஆம் இலக்க சுற்றுநிருவத்தின் பிரகாரம் உத்தியோ கத்தர்களுக்குப் பெற்றுக்கொடுப்பாரா,

(viii) இன்றேல், அதன் காரணம் யாது,

(ix) சம்பந்தப்பட்ட பிரசவ விடுமுறையைப்பெறாத பெண் உத்தியோகத்தர் களுக்குக்' கிடைக்கும் நலன்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0172/ '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரு மானவரைக் கேட்பதற்கு,—

(அ) அரச அனுசரணையுடன் அனுராதபுரம் மாவட்டத்தில், மாத்தளைச் சந்தி, குருந்தன்குலமவில் வரையறுக்கப்பட்ட ஜனதா லங்கா மிளகாய் கம்பனி எனும் பெயரில் ஒரு கம்பனி தாபிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(அ) (i) ஆமெனில், அக்கம்பனியின் தலைவர் யார்,

(ii) ஒரு பணிப்பாளர் சபையும், ஒரு உத்தியோகத்தர் சபையும் நியமிக்கப் பட்டிருப்பின் அவர்களது பெயர் மற்றும் முகவரிகள் யாவை,

(iii) கம்பனி தாபிக்கப்படும் பொருட்டு வடமத்திய மாகாண சபையின் அல்லது அரசாங்கத்தின் பணம் அல்லது வளங்கள் பயன்படுத்தப்பட்டதா,

(iv) ஆமெனில், பணம் இடப்பட்ட நிறுவனம் மற்றும் பணத்தொகை யாது,

(v) வேறு வசதிகள் வழங்கப்பட்டிருப்பின், அவை யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்கம்பனியில் கமக்காரர்கள் அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டார்களா,

(ii) ஆமெனில், அவர்களுடைய பெயர், முகவரிகள், அங்கத்துவப் பணம் அல்லது அவ்வாறு சேகரிக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது,

(iii) அங்கத்துவப்பணம் சேகரிக்கப்பட்டிருப்பின் அவை எந்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன,

(iv) அங்கத்துவப் பணத்தொகைகளை மீளச்செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) கைவிடப்பட்டிருந்த மேற்படி கம்பனி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதெனில் அது எப்போது,

(ii) இதன் பொருட்டு கமநெகும கருத்திட்டத்தின் மூலம் பணம் ஒதுக்கப் பட்டிருப்பின் குறித்த பணத்தொகை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0173/ '08

கௌரவ ஆர். பி. எ. ரணவீர பதிரண,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இந்நாட்டுக்குத் தேவையான சோளம் எந்தளவு இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்றது என்பதையும்,

(ii) 1987 தொடக்கம் 2007 வரை அந்தந்த வருடங்களில் எவ்வளவு சோளம் உற்பத்தி செய்யப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சோள செய்கைக்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்வதற்காக இருக்கும் அரச பண்ணைகளின் எண்ணிக்கையையும் அவை எவ்வளவு என்பதையும்,

(ii) இந்த ஒவ்வொரு பண்ணைகள் மூலமும் 1987 தொடக்கம் 2007 வரையிலான காலப்பகுதியில் எவ்வளவு சோள விதை வருடாந்தம் உற்பத்தி செய்யப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) சிறந்த தரத்திலான சோள விதைகள் கிடைக்காமையினால் சோளச் செய்கையில் ஈடுபட்டிருக்கும் மக்கள் மிகவும் அசௌகரியத்துக்குள்ளாகியிருப்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) சோளச் செய்கை பின்னடைவு கண்டிருப்பின் சோளச் செய்கையை விருத்தி செய்ய எத்தகைய வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0174/ '08

கௌரவ ஆர். பி. எ. ரணவீர பதிரண,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இந்நாட்டுக்குத் தேவையான செத்தல் மிளகாய் எந்தளவு இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்றது என்பதையும்,

(ii) 1987 தொடக்கம் 2007 வரை அந்தந்த வருடங்களில் எவ்வளவு செத்தல் மிளகாய் உற்பத்தி செய்யப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) செத்தல் மிளகாய் செய்கைக்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்வதற்காக இருக்கும் அரச பண்ணைகளின் எண்ணிக்கையையும் அவை எவ்வளவு என்பதையும்,

(ii) இந்த ஒவ்வொரு பண்ணைகள் மூலமும் 1987 தொடக்கம் 2007 வரையிலான காலப்பகுதியில் எவ்வளவு செத்தல் மிளகாய் விதை வருடாந்தம் உற்பத்தி செய்யப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) சிறந்த தரத்திலான செத்தல் மிளகாய் விதைகள் கிடைக்காமையினால் செத்தல் மிளகாய் செய்கையில் ஈடுபட்டிருக்கும் மக்கள் மிகவும் அசௌகரியத்துக் குள்ளாகியிருப்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) செத்தல் மிளகாய் செய்கை பின்னடைவு கண்டிருப்பின் செத்தல் மிளகாய் செய்கையை விருத்தி செய்ய எத்தகைய வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0301/ '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான வெஹெரகலப் பிரிவில் ருஹுணுகம அலகில் 125 ஆம் இலக்க காணியில் சுமார் 10 வருடகாலமாக எல். கே. நிமல் என்பவர் இரண்டு மாடிக்கட்டிடமொன்றை அமைத்து நிரந்தரமாகக் குடியிருக்கின்றாரென்பதையும்,

(ii) இக்கட்டிடத்துக்கு மின்சாரம் பெறுவதற்காக வெஹெரகலப் பிரிவு முகாமையாளரினால் உரிமை உறுதிப்படுத்தப்பட்ட கடிதமொன்று மின்சார சபைக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதையும்,

(iii) இவர்களின் பெயர்கள் வாக்காளர் பெயர்ப்பட்டியலில் காணப்படுகின்ற தென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்காணியையும் இக்கட்டிடத்தையும் மகாவலி அதிகாரசபைக்குச் சுவீகரித்துக்கொள்வதற்காக பொலன்னறுவை நீதவான் நீதிமன்றத்தில் 44/149/06 ஆம் இலக்க வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை வெறும் அரசியல் பலிவாங்கலாகும் என்பதையும்,

(ii) 2004 ஆண்டு தேர்தலின்போது மகாவலி பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இவரின் வீட்டுக்கு துப்பாக்கி வேட்டுக்களைத்தீர்த்துவிட்டு ஓடினார்கள் என்பதையும்,

(iii) இது தொடர்பாக அரலகன்வில பொலீசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள தென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இவரின் காணியைச் சுற்றியுள்ள ஏனைய அனைத்து காணிகளும் ஆரம்பத்தில் காணி பெற்றோரிடமிருந்து பெற்றுக்கொண்டு அனுபவிக்கப்பட்டு வருகின்ற வையாக உள்ளதுடன் அக்காணிகள் தொடர்பாக இவ்வாறான நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதது ஏனென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) திரு. நிமலுக்கு மேலும் இவரின் வீட்டையும் காணியையும் அனுபவிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் குறிப்பிடு வாரா?

(உ) இன்றேல், ஏன்?

---

## 2008, ஓகத்து 08, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0137/ '08

கௌரவ லக்ஷமன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 தேர்தலில் அரசாங்கம் அதிகாரத்தைப் பெறுவதற்கு முன் மொறட்டுவை பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருந்த

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2004 தேர்தலில் அரசு அதிகாரத்தை ஏற்றதன் பின் மொறட்டுவை பிரதேச செயலகப் பிரிவில் இன்றுவரை உள்ள

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபின் மேற்படி பிரதேச செயலகப் பிரிவுக்குள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்கள், விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0138/ '08

கௌரவ லக்ஷமன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 தேர்தலில் அரசாங்கம் அதிகாரத்தைப் பெறுவதற்கு முன் கடுவெல பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருந்த

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2004 தேர்தலில் அரசு அதிகாரத்தை ஏற்றதன் பின் கடுவெல பிரதேச செயலகப் பிரிவில் இன்றுவரை உள்ள

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபின் மேற்படி பிரதேச செயலகப் பிரிவுக்குள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்கள், விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை யென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0139/ '08

கௌரவ லக்ஷமன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 தேர்தலில் அரசாங்கம் அதிகாரத்தைப் பெறுவதற்கு முன் கொலன்னாவ பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருந்த

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2004 தேர்தலில் அரசு அதிகாரத்தை ஏற்றதன் பின் கொலன்னாவ பிரதேச செயலகப் பிரிவில் இன்றுவரை உள்ள

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபின் மேற்படி பிரதேச செயலகப் பிரிவுக்குள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்கள், விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை யென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0175/ '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள் விமான சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) அநுராதபுர மாவட்டத்தில் பதவிய விவசாய குடியேற்றத் திட்டத்துக்கு நீர் வழங்கும் குளம் மற்றும் நீர்ப்பாசன கட்டமைப்பு புனர்நிர்மாணம் செய்யப்பட்ட திகதியையும் விவசாய குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதியையும் வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்த விவசாய குடியேற்றத்திட்டத்துக்கு நீர் வழங்கும் குளத்தின் கொள்ளளவு எத்தனை ஏக்கர் என்பதையும்,

(ii) அதன் மூலம் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iii) பதவிய திட்டத்தின் கீழ் 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் சிறுபோகம் மற்றும் பெறும்போகத்தில் பயிரிடப்பட்ட காணிகளின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இந்தக் குளத்தின் பழுதடைந்துள்ள நீர்ப்பாசன கட்டமைப்பின் காரணமாக விவசாய நிலங்களுக்கு போதுமான நீர் கிடைப்பதில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) இந்தக் குளத்தின் நீர்ப்பாசன கட்டமைப்பை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமாக என்பதையும்,

(ii) ஆமெனில், அந்தப் புதுப்பித்தல் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0176/ '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள் விமான சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) அநுராதபுர மாவட்டத்தில் கனதராவ விவசாய குடியேற்றத் திட்டத்துக்கு நீர் வழங்கும் குளம் மற்றும் நீர்ப்பாசன கட்டமைப்பு புனர்நிர்மாணம் செய்யப்பட்ட திகதியையும் விவசாய குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதியையும் வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்த விவசாய குடியேற்றத்திட்டத்துக்கு நீர் வழங்கும் குளத்தின் கொள்ளளவு எத்தனை ஏக்கர் அடி என்பதையும்,

(ii) அதன் மூலம் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iii) கனதராவ திட்டத்தின் கீழ் 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் சிறுபோகம் மற்றும் பெறும்போகத்தில் பயிரிடப்பட்ட காணிகளின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்குக் கூறுவாரா?

(இ) இந்தக் குளத்தின் பழுதடைந்துள்ள நீர்ப்பாசன கட்டமைப்பின் காரணமாக விவசாய நிலங்களுக்கு போதுமான நீர் கிடைப்பதில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) இந்தக் குளத்தின் நீர்ப்பாசன கட்டமைப்பை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமாக என்பதையும்,

(ii) ஆமெனில், அந்தப் புதுப்பித்தல் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்குக் கூறுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0177/ '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அநுராதபுர மாவட்டத்தில் இனங்காணப்பட்டுள்ள சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(ii) இதில் சிகிச்சைக்காக அரசாங்க வைத்தியசாலைக்கு வருபவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) கெப்பிடதிகொல்லாவ, வெளிஓயா, மெதவச்சிய பிரதேசங்களில் எத்தனை சிறுநீரக நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்பதையும்,

(ii) இப்பிரதேசங்களில் எக்காரணத்தினால் சிறுநீரக நோயளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன என்பதையும்,

(iii) சிறுநீரக நோயளர்களின் அதிகரிப்பினை கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0303/ '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திஸ்ஸஅத்தநாயக்கவினால் 1999 ஆம் ஆண்டில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு அப்போதைய நெசவுத் தொழில் அமைச்சரால் வழங்கப்பட்ட பதிலில், காலி மற்றும் அநுராதபுரத்தைத் தவிர ஏனைய பத்து மின்தறி நெசவுத்தொழில் முயற்சிகளின் ஊழியர்களுக்கு ஓய்வூதிய உரித்துக்கிடையாதென குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2003 ஆம் ஆண்டு வரை ஓய்வூதிய உரித்துக் கிடையாதெனக் கருதப்பட்ட மின்தறி நெசவுத்தொழில் ஊழியர்கள் 800 பேருக்கு 2003.01.01 ஆம் திகதியிலிருந்து ஓய்வூதிய உரித்துக்கிடைத்ததென்பதை அவர் அறிவாரா?

(இ) (i) சட்டமா அதிபரின் இலக்கம் ஈ 423/2002 மற்றும் 2003.02.07 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் பத்து வருட சேவைக்காலத்தை கொண்டிராத மின்தறி நெசவுத்தொழில் ஊழியர்கள் எவரையும் ஓய்வுபெறச் செய்ய வேண்டாமென நெசவுத்தொழில் பணிப்பாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்ததா,

(ii) எஞ்சியுள்ள ஊழியர்களை ஓய்வுபெறச் செய்றவதற்கு தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் ஆ/iv/2/1/66 ஆம் இலக்க 2003.03.10 ஆம் திகதிய அறிவுரைகள் மற்றும் அதே இலக்கத்தைக் கொண்ட 2003.05.19 ஆம் திகதிய கடிதத்தைப் பயன்படுத்தாதிருப்பதற்கான காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) காலி மற்றும் அநுராதபுரம் சநசவுத்தொழில் முயற்சிகளில் பத்துவருட சேவைக் காலத்தைக் கொண்டிராதவர்களை ஓய்வுபெறச் செய்வதைப் போன்று லேவெல்ல, பொல்கொல்ல உட்பட ஏனைய பத்து மின்தறி நெசவுத்தொழில் துறைகளின் ஊழியர்களை ஓய்வுபெறச் செய்யாததன் மூலம் மீறப்பட்டுள்ள உரிமைகளை மீண்டும் பெற்றுக்கொடுப்பதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0304/ '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கை மகாவலி அதிகார சபையின் விக்டோரியா வலயத்தைச் சேர்ந்த அம்பகொட்டேவத்த மாற்றுக்காணி அடிப்படையில் காணி பெற்றுள்ளவர்கள் வருடாந்தம் வரி செலுத்த வேண்டுமென கட்டளையிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 1983 வரை அம்பகொட்டேவத்தையில் தோட்டத் தொழிலாளர்களாக வேலை செய்த இவர்களுக்கு விக்டோரியா நீர்த்தேக்கத்தில் மூழ்கிய காணிகளில் வசித்தவர்கள் என்ற வகையில் குறிப்பிட்ட தோட்டத்தில் காணி வழங்கிய காரணத்தினால் தொழிலை இழந்துவிட்டனரென்பதையும்,

(ii) அவர்களது மாட்டுப்பட்டி மற்றும் கோழி வளர்ப்பு போன்ற மேலதிக வருமானங்கள் தடைப்பட்டதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மகாவலி காணிகளுக்கு வரி விதிப்பதை நிறுத்தி நிவாரணம் அளிக்க அவர் நடவடிக்கையெடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0305/ '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— நீதி, சட்டமறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அநுராதபுரம், இரண்டாவது கட்டம், இலக்கம் 618 பீ 3/9 எனும் முகவரியில் வசிக்கும் திரு. எச். எல். கருணாசேன அநுராதபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிமன்ற எழுதுவினைஞர் II ஆம் தர உத்தியோகத்தராக இருந்தார் என்பதையும்,

(ii) 2004.08.31 ஆம் திகதியிலிருந்து திரு. கருணாரத்னவின் வேலை இடை நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி வேலை இடைநிறுத்தத்துடன் தொடர்புடைய "பீ" அறிக்கையானது வழக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2001 ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டு வரை சேவையாற்றிய ஒருவருடையதாதலால், மேற்படி வேலை இடைநிறுத்தமானது தாபனக்கோவையின் XLVIII அத்தியாயத்தின் 31:1 வாசகத்தின் கீழ் சட்ட ரீதியானதல்ல என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) மேற்படி வேலை இடைநிறுத்தத்துடன் தொடர்புடையதாக 2005.06.29 ஆம் திகதி நீதிச்சேவைகள் ஆணைக்குழுவால் விசாரணையொன்று நடத்தப்பட்டதன் பின்னர், 2005 செப்தெம்பர் 05 இருந்து இவருக்கு அரைச்சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் இவரது குற்றமற்ற தன்மை அதன் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதன் காரணமாக நிலுவைச் சம்பளத்துடன் இவரை மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கு அவர் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள் வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0448/ '08

கௌரவ பேமசிறி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மாத்தறை மகாணாம பாலத்தை நிர்மாணித்த ஒப்பந்தகார கம்பனியின் பெயர் யாது,

(ii) இப்பாலம் யாரால் திறந்துவைக்கப்பட்டது,

(iii) பாலம் திறந்துவைக்கப்பட்ட திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்குக் கூறுவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தைத் திறந்து வைப்பதன் நிமித்தம் எத்தனை டிஜிச்டெல் விளம்பரப் பலகைகள் பொருத்தப்பட்டன,

(ii) இவை பொருத்தப்பட்ட இடங்கள் மற்றும் இவ்விளம்பரப்பலைகளுக்காக செலவிடப்பட்ட தொகை வெவ்வேறாக என்ன

என்பதை அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(இ) (i) உரிய திறப்பு விழாவின் நிமித்தம் மாத்தறை நகரில் பனை மரநடுகை இடம்பெற்றிருக்குமாயின் அதன் எண்ணிக்கை எத்தனை,

(ii) பனை மரமொன்றின் நடுகைக்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0449/ '08

கௌரவ வை. எம். நவரத்ன பண்டா,— கிராமியக் கைத்தொழில், சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கண்டி மாவட்டத்திலுள்ள பல்லேகல கைத்தொழில் பேட்டைக்கு சொந்தமான முழுக்காணியின் அளவு என்னவென்பதையும்,

(ii) பல்லேகல கைத்தொழில் பேட்டையில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அவற்றின் உற்பத்திகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இக்கைத்தொழில் பேட்டையை அடுத்துள்ள காணி தனிப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி காணித்துண்டுகளை பெற்றுக்கொண்டவர்களின் பெயர் பட்டியலை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) மேற்படி காணிப்பெறுனர்களுக்கு சொந்தமான வேறேதும் காணிகள் நாட்டில் எந்தவொரு இடத்திலும் இல்லையென உறுதிசெய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) சம்பந்தப்பட்ட காணி சட்டபூர்வமான முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டதா என்பதையும்,

(iii) இவ்வாறு தனியார் பாவனைக்காக காணிகள் வழங்கப்படுவதினால் கைத்தொழில் பேட்டையின் தொழிற்சாலைகளுக்கு ஏதேனும் குந்தகம் ஏற்படக்கூடுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) மேற்படி காணிகளை மீளப்பெற்றுக்கொள்வதற்கு அவர் தேவையான நடவடிக் கைகளை மேற்கொள்வாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0456/ '08

கௌரவ விஜித ரணவீர,— சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கையிலுள்ள தேசிய வனப்பூங்காக்களின் எண்ணிக்கையையும், அவை யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி வனப்பூங்காக்கள் அமைந்துள்ள மாவட்டம், மாகாண சபை அதிகாரப்பிரதேசம், உள்ளூராட்சி அதிகாரப்பிரதேசம் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு ஆகியவை அடங்கலான விபரங்களை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை மேற்படி ஒவ்வொரு வனப்பூங்காவிலிருந்தும் கிடைத்த வருடாந்த வருமானம் யாதென்பதையும்,

(ii) மேற்படி ஆண்டுகளில் ஒவ்வொரு வனப்பூங்காவிலிருந்தும் கிடைத்த வருமானத்திலிருந்து சம்பந்தப்பட்ட மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் வழங்கிய பணத்தொகை யாதென்பதையும்,

(iii) வனப்பூங்காவின் வருடாந்த வருமானத்திலிருந்து வரியாக செலுத்தப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்,

(iv) வரி செலுத்தலுக்கு மேலதிகமாக வேறு ஏதேனும் செலுத்தப்படவிருப்பின் அவை யாவையென்பதையும்,

(v) மேற்படி ஆண்டுகளின் ஒவ்வொரு வனப்பூங்காவிற்கும் அமைவாக இவை எந்நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

கௌரவ ரவி கருணாநாயக்க,— சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்தல்,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 06, 2007) "வினைத்திறமை மிக்கதோர் நிர்வாகத்தை மேற்கொள்ளுமுகமாகவும் தமது அமைச்சர்களது செயற்பாடுகளை விமர்சனரீதியாக ஆய்வு செய்வதற்கு ஏதுவான வகையில் சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப் பெற்றது. [ பா.3/ '05]

பா.1 / '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஆயுதங்களை பதிவு செய்தல்,— இலங்கையிலுள்ள அனைத்து ஆயுதங்களையும் பதிவுசெய்ய வேண்டுமெனவும் அவ்வாறு பதிவு செய்ததின் பின்னரும் யாரிடமாவது அதிகாரமற்ற ஆயுதங்கள் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் குறித்த நபருக்கு எதிராக குற்றவியல் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக வழக்குத் தொடரப்பட்டு 20 வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட வேண்டுமென இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.2 / '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— வங்கி அலுவலக நேரத்தை நீடித்தல்,— நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துமுகமாக வங்கி அலுவலக நேரத்தினை 9.00 மணி முதல் 16.00 மணிவரை நீடிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.3 / '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— கோட்டே தேர்தல் தொகுதியில் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடிவிடுதல்,— மிக சுதந்திரமாகவே மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவது நாட்டின் ஒழுக்கவிழுமியங்களுக்கு பங்கமேற்படுத்தி வருவதால் கோட்டே தேர்தல் தொகுதியில் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலை யங்களையும் மூடிவிட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.4 / '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊடகவியலாளர்களுக்கு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) அரசாங்கக் கணக்குக்குழு (PAC) மற்றும் ஆலோசனைக் குழுக்கூட்டங்களில் பிரசன்னமாயிருக்க அனுமதியளித்தல்,— அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) அரசாங்கக் கணக்குக்குழு (PAC) மற்றும் ஆலோசனைக்குழுக் கூட்டங்களில் இதுபோன்ற கலந்துரையாடல்கள் மிக விளை பயனுடையதாகவும் அர்த்தபுஷ்டியுள்ளதாகவும் வெளிப்படையானதுமாக அமைய ஏதுவாக இருக்கும் என்பதால், ஊடகவியலாளர்களுக்கு அதில் பிரசன்னமாயிருக்க அனுமதியளிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.5 / '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவிகளை அளித்தல்,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவியாக அதிகபட்ச கடனாக 2,50,000 ரூபாவை 5% குறைந்த வட்டி வீதத்தில் வழங்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.6 / '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்குதல்,— நாட்டினுள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் போன்றவற்றின் பாவனை வேகமாக அதிகரித்து வருவதாலும் அவ்வாறான கழிவுப் பொருட்களை பாரதூரமின்றி அகற்றுவதனால் ஏற்படும் பாரியளவு சுற்றாடல் மாசுபடுதல் நிமித்தமும் பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.7 / '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச வங்கிகளிலிருந்து கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுதல்,— அரச வங்கியிலிருந்து ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுவதற்காக சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.8 / '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் செயற் படுத்தல்,— பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்படும் தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பயனுள்ள பங்களிப்பொன்றாக அமைவதற்கு ஏதுவாக அவைகள் ஒரு வருடத்துக்குள் விவாதிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டால் ஆறுமாதங்களுக்குள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப் பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.9 / '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைத்தல்,— நாட்டில் தேசிய மனப்பாங்கை ஏற்படுத்துமுகமாக பாராளுமன்ற அமர்வு ஆரம்பமாகும் போதும் ஒத்திவைக்கும் போதும் பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைக்க வேண்டு மென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.10 / '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பலமான இலங்கை அடையாளத்தை ஏற்படுத்துதல்,— அரச ஆவணங்களில் ஒருவரது சாதியையும் சமயத்தையும் வெளிப்படுத்த வேண்டுமென்ற தேவைப்பாடு பலமான தேசிய அடையாளத்தை ஏற்படுத்துவற்கு தடையாகவும் இடர்ப்பா டகவுமுள்ளதால் இத்தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்று இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.11 / '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக நோக்கங்களுக்காக சமயத் தலைவர்களின் உருவங்களை பயன்படுத்துவதை தடைசெய்தல்,— சகல சமயங்களும் சமமாக மதிக்கப் படல் வேண்டுமென்பதுடன் புத்தபெருமான், யேசுநாதர், சிவபெருமான், முஹம்மட் நபி (ஸல்) அவர்கள் ஆகியோரின் உருவங்களை வர்த்தக விளம்பரங்களிலோ வேறுவிதமான சமயம்சாராத படிவங்களிலோ பயன்படுத்தலை தடைசெய்தலும் வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.12 / '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்குதல்,— சகலருக்கும் சமமான நியாயத்தை உறுதிப்படுத்துவதற்காக சனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு பலமான சுதந்திர ஊடக வியலை ஏற்படுத்துவதற்கும் நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறை களை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.13/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கை களுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் மற்றும் நடாத்துதல், மாதாந்த சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.14 / '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசியல் கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பித்தல்,— எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் பெறப்பட்ட வருமானமும் செலவிடப்பட்ட செலவினமும் பற்றிய கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமெனவும் வருடம் தோறும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.15 / '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச அலுவலர்களுக்கு தண்டனை வழங்குதல்,— அரச உயர் அலுவலர்கள் தமது சுதந்திர நிலைமையை அரசியல் மயமாக்கி மற்றும் அவர்கள் முறைகேடாக நடந்தால் அதனால் அவர்கள் குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்களை கையளித்து தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.16 / '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்,— அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் விசேட திறமையுள்ள அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 70 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.17 / '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வியைப் பாதுகாப்பதற்காக தரப்பாதுகாப்பு பேரவையொன்றை நிறுவுதல்,— பொறுப்பற்ற முறையில் பல்கலைக்கழக பெயர்களை பாவித்து இலங்கையினுள் பல கல்வி நிறுவனங்களை ஏற்படுத்துவதனால் கல்வியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதற்காக "தரப் பாதுகாப்பு பேரவையொன்றை" சட்டத்தின் மூலம் உடனடியாக நிறுவ வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.18 / '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— 'விசேட வழக்குத் தொடுநர்' எனப்படும் பதவியொன்று உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்றிறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்திறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு ''விசேட வழக்குத் தொடுநர்'' எனப்படும் பதவியொன்று உருவாக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.19 / '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்துதல்,— இந்தியா மற்றும் ஐக்கிய இராச் சியத்தில் போன்று, வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலுள்ள எதிரானதும் சார்ப்பற்றதுமான தாக்கல்கள் ஏதும் இருப்பின் அவைகளை நிவர்த்தி செய்வதற்கும் தனிப்பதற்கும் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்தப்பட வேண்டு மென்று இப்பாராளுமன்றம் கருது கின்றது.

பா.20 / '08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— கேகாலை மாவட்டத்தில் நூதனசாலையொன்றினை தாபித்தல்,— கேகாலை மாவட்டத்தில் உள்ள புராதன, கலாச்சார, தேசிய விழுமியங்கள் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் தொல்பொருட்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலுமாக நூதனசாலையொன்று தாபித்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.21 / '08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,- தேசிய கொள்கை நிர்ணயம் தொடர்பில் தேசிய கொள்கையாக்க சபை ஒன்றினை நியமித்தல்,- முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.22 / '08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலை செய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள்ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.23 / '08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— புதிய கண்டுபிடிப்புகளை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப்பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக் கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்துவதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற்காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.24 / '08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள்நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளைமேற்கொள்ளும் உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.25/ '08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— நீதித்துறை, காவல்துறை மற்றும் சிறைச்சாலை ஆகியவற்றை ஒன்றிணைத்து சனாதிபதி ஆணைக்குழுவொன்றினை நியமித்தல்,— சமூகத்தில் வியாபித்து வரும் குற்றச் செயல்களை குறைப்பதற்காகவும், குற்றவியல் சட்டங்களில் உள்ள குறைபாடுகளைக் குறைத்து அதனை மேம்படுத்தியும்

காணித் தகராறுகள் உட்பட நீதிமன்றங்களில் குவிந்திருக்கும் விசாரணைகளின் தேக்க நிலையை நீக்குவதற்காகவும் மற்றும் நீதித்துறை, காவல்துறை, சிறைச்சாலை ஆகியவற்றினை நவீன மயப்படுத்தி துரித சேவைகளை வழங்குதனை நோக்கமாகவும் கொண்டு நீதித்துறை, காவல்துறை, சிறைச்சாலை ஆகிவற்றை ஒன்றிணைத்து சனாதிபதி ஆணைக்குழு வொன்றினை நியமிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.26 / '08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.27 / '08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.28 / '08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை ஒரு வாரகாலத்தினுள் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை மீளப் பெற விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரு வார காலத்தினுள் அவற்றைப் பெற்றுக்கொடுப் பதற்கு உரிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருது கின்றது.

பா.29 / '08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— அரச கூட்டுத்தானங்கள், சபைகள், அதிகார சபை மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களிற்கும் தவிசாளர்களையும் இயக்குனர் சபைகளையும் நியமித்தல்,— அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபை மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களிற்கும் தவிசாளர்களாகவும் இயக்குனர் சபை உறுப்பினர்க ளாகவும் தொழில்சார் கல்வித் தகைமைகள், அனுபவங்கள் உள்ளவர்களை மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.30 / '08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— கிராம உத்தியோகப் பிரிவுகள், பிரதேச செயலாளர் பிரிவுகள், மாவட்ட நிர்வாக பிரதேசங்களின் எல்லைகளை விஞ்ஞான முறையில் மீள நிர்ணயித்தல்,— நாடு முழுவதும் மீண்டும் நில அளவீடொன்றினை மேற்கொண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள், பிரதேச செயலாளர் பிரிவுகள், மாவட்ட நிர்வாக பிரதேசங்களின் எல்லைகளை விஞ்ஞான முறையில் மீள நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.31/ '08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— ஸ்ரீ லங்கா, வெளிநாட்டு சேவைக்கு வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் மட்டுமே ஆட்சேர்த்தல்,— ஸ்ரீ லங்கா, வெளிநாட்டு தூதுவராலய சேவைக்கு ஆட்சேர்க்கும் போது வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் மட்டுமே தீர்மானம் எடுப்பதுடன் அடிப்படைக் கல்வித் தகைமைகளை பரிசீலித்தலே நேர்முகப்பரீட்சையின் போது மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.32 / '08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குதல்,— குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குதலும் ஒரே நீதிமன்றத்தில் இடம்பெறக்கூடிய வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.33 / '08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்களை வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேருந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவசப் பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.34 / '08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளான வர்களுக்கான நிவாரணம் அளிக்குமுகமாக சனாதிபதி ஆணைக்குழு,— ஆரம்ப காலம் முதல் இன்றுவரை தாம் கொண்ட அரசியல் கொள்கை காரணமாக அரசியல் பழிவாங்கல்களுக் குள்ளானவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்து நிவாரணம் வழங்குவதற்காக பூரண பலமுடைய சனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.35 / '08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனா சிரியர்களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.36 / '08

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தேசிய மொழிகளிற்கான கல்விப் பீடமொன் றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டு மென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 37 / '08

கௌரவ லஷ்மன் நிபுணஆரச்சி,— ஓய்வு பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வு பணிக்கொடை பெற்றுக்கொள்ளப்படாத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.38/ '08

கௌரவ விஜித ரணவீர,— உஸ்ஸன்கொட மலைத்தொடர் அமைந்துள்ள நிலப்பரப்பைப் பேணிப் பாதுகாத்தல்,— வரலாற்றுக்கு முந்திய யுகத்தில் மத்திய முன்னைய காலகாலத்துக் குரியதென இனங்காணப்பட்டுள்ளதும் தென் மாகாணத்தில் அம்பலாந்தோட்டை பிரதேசச் செயலாளர் பிரிவில் கடற்கரையோரத்தல் அமைந்துள்ளதும் தென்னிலங்கையின் ஹோர்டன் சமவெளி எனப் பிரபல்யமடைந்துள்ளதுமான

உஸ்ஸன்கொட மலைத்தொடர் அமைந்துள்ள நிலப்பரப்பு, இலங்கையில் இருபத் தெட்டாயிரம் வருடங்கள் பழமை வாய்ந்த திறந்த வெளிக் குடியேற்றமொன்றின் கேத்திரவடிவ ஆயுதங்களும் பாறைகளும் கண்டுபிடிக்கப்பட்ட நிலப்பகுதியாகவும் கடல் மற்றும் தரை உயிரியல் பல்வகைத்தன்மை யில் பெருமளவு வளங்கள் நிறைந்த நிலப்பகுதியாகவும், சிறந்த கடலாமைகளின் வாழ்விட மாகவும், சுனாமிப் பேரலையினால் மக்களைப் பாதுகாத்த மதிலாகவும் அதிக பெறுமதியை கொண்டிருப்பதனால் இந்நிலப்பகுதியில் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களை நிறுத்தி விட்டு உடனடியாகப் பேணிப் பாதுகாக்க வேண்டிய சுற்றாடல் தொகுதி யொன்றாக பிரகடனப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

---

## 2008, ஓகத்து 19, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0140/ '08

கௌரவ லக்ஷமன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 தேர்தலில் அரசாங்கம் அதிகாரத்தைப் பெறுவதற்கு முன் மஹரகம பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருந்த

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2004 தேர்தலில் அரசு அதிகாரத்தை ஏற்றதன் பின் மஹரகம பிரதேச செயலகப் பிரிவில் இன்றுவரை உள்ள

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபின் மேற்படி பிரதேச செயலகப் பிரிவுக்குள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்கள், விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை யென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0141/ '08

கௌரவ லக்ஷமன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 தேர்தலில் அரசாங்கம் அதிகாரத்தைப் பெறுவதற்கு முன் ஹோமாகம பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருந்த

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2004 தேர்தலில் அரசு அதிகாரத்தை ஏற்றதன் பின் ஹோமாகம பிரதேச செயலகப் பிரிவில் இன்றுவரை உள்ள

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபின் மேற்படி பிரதேச செயலகப் பிரிவுக்குள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்கள், விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை யென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0142/ '08

கௌரவ லக்ஷமன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 தேர்தலில் அரசாங்கம் அதிகாரத்தைப் பெறுவதற்கு முன் இரத்மலானை பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருந்த

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2004 தேர்தலில் அரசு அதிகாரத்தை ஏற்றதன் பின் இரத்மலானை பிரதேச செயலகப் பிரிவில் இன்றுவரை உள்ள

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபின் மேற்படி பிரதேச செயலகப் பிரிவுக்குள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்கள், விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை யென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0178/ '08

கௌரவ ஆர். பி. எ. ரணவீர பதிரண,— விவசாய அபிவிருத்தி மற்றும் கமத்தொழில் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்வதற்கு இருக்கும் அரசுக்குரிய விவசாயப் பண்ணைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த விவசாயப் பண்ணை ஒவ்வொன்றினதும் பரப்பளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iii) இந்த விவசாயப் பண்ணை ஒவ்வொன்றும் 1990 தொடக்கம் 2007 ஆம் ஆண்டுவரை வருடாந்தம் எவ்வளவு விதை நெல்லை உற்பத்தி செய்தன என்பதையும்,

(iv) சிறு போகம் மற்றும் பெரும்போகத்துக்கு தேவைப்படும் விதை நெல்லின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(v) ஒவ்வொரு போகத்துக்கும் தேவைப்படும் விதை நெல்லில் எந்தளவு அரச பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) நெற்செய்கைக்குத் தேவையான சிறந்த தரத்திலான விதை நெல்லினை பெறமுடியாமல் விவசாயிகள் அசௌகரியத்துக்குள்ளாகி இருப்பதை அவர் அறிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0179/ '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பத்திரண,— கமநல அபிவிருத்தி, கமத்தொழில் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இந்நாட்டுக்குத் தேவையான பெரிய வெங்காயம் எந்தளவு இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்றது என்பதையும்,

(ii) 1987 தொடக்கம் 2007 வரை அந்தந்த வருடங்களில் எவ்வளவு பெரிய வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பெரிய வெங்காய செய்கைக்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்வதற்காக இருக்கும் அரச பண்ணைகளின் மூலம் 1987 தொடக்கம் 2007 வரையிலான காலப்பகுதியில் எவ்வளவு பெரிய வெங்காய விதை வருடாந்தம் உற்பத்தி செய்யப்பட்டது என்பதையும்,

(ii) இந்த ஒவ்வொரு பண்ணைகள் மூலம் 1987 தொடக்கம் 2007 வரையிலான காலப்பகுதியில் எவ்வளவு பெரிய வெங்காய விதை வருடாந்தம் உற்பத்தி செய்யப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) சிறந்த தரத்திலான பெரிய வெங்காய விதைகள் கிடைக்காமையினால் பெரிய வெங்காய செய்கையில் ஈடுபட்டிருக்கும் மக்கள் மிகவும் அசௌகரியத்துக் குள்ளாகியிருப்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) பெரிய வெங்காய செய்கை பின்னடைவு கண்டிருப்பின் பெரிய வெங்காயச் செய்கையை விருத்தி செய்ய எத்தகைய வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0180/ '08

கௌரவ ஆர். பி. எ. ரணவீர பதிரண,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரு மானவரைக் கேட்பதற்கு,—

(அ) அநுராதபுரம் விமானப்படை முகாமின் ஓடுகளத்தை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த விமான நிலைய ஓடுகளத்தை விஸ்தரிப்பதற்கான பணிகள் எந்த நிறுவனத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) அதற்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டதா என்பதையும்,

(iii) அவ்வாறெனின் அதற்காக எத்தனை நிறுவனங்கள் முன்வந்தன என்பதையும்,

(iv) எந்த நிறுவனத்துக்கு கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) விமான நிலைய ஓடுகளத்தை விஸ்தரிப்பதற்கு எவ்வளவு தொகை மதிப்பீடு செய்யப்பட்டது என்பதையும்,

(ii) இந்த விமான நிலைய ஓடுகளத்தை விஸ்தரிப்பதற்கு எவ்வளவு பரற்கற்கள் தேவைப்படுகின்றன என்பதையும்,

(iii) தேவைப்படும் பரற்கற்களில் எந்தளவு பரற்கற்கள் முகாமுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதையும்,

(iv) இந்த விமான நிலைய ஓடுகளத்தை விஸ்தரிப்பதற்காக ஏற்றிவரப்படும் பரல்கற்களுக்கான அரச பங்கு செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) அவ்வாறெனின் எந்த நிறுவனத்துக்கு எவ்வளவு தொகை செலுத்தப்பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0306/ '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) சம்பந்தப்பட்ட அமைச்சர் பதவி ஏற்ற பின்னர் இற்றைவரை வெளிநாட்டு விஜயங்கள் மேற்கொண்டுள்ள நாடுகள் யாவை என்பதையும்,

(ii) அவற்றில் உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட விஜயங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அவ்விஜயங்களில் அமைச்சருடன் கலந்துகொண்ட உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி விஜயங்களில் அமைச்சரின் தனிப்பட்ட பணியாற்டொகுதி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டிருப்பின் அவர்களது பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்,

(iii) அமைச்சர் உட்பட ஏனைய உத்தியோகத்தர்கள் பயணம் செய்த விமானக்கம்பனி மற்றும் விமான வகுப்பு யாவையென்பதையும்,

(iv) மேற்படி விஜயங்களுக்காக அமைச்சர் உட்பட உத்தியோகத்தர்களுக்காக அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் தனித்தனியாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) மேற்படி வெளிநாட்டு விஜயங்களினால் இந்த நாட்டுக்கு கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு உதவிகள், வெளிநாட்டுக்கடன்கள், கருத்திட்டங்கள் அல்லது வேறு நன்மைகள் யாவையென்பதை அவர் அந்தந்த விஜயம் ரீதியாக தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0307/ '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கமநல சேவைகள் திணைக்களத்திற்கு இடைச்சேர்க்கப்பட்ட கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தியாளர்களின் முதலாம் தரத்திற்குத் தேவையான தகைமைகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி முதலாந்தரப் பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக எவரேனும் சிலர் போலிக் கல்விச் சான்றிதழ்களை சமர்ப்பித்துள்ளார்களா என்பதையும்,

(iii) ஆமெனில், இவர்கள் யாரென்பதையும்,

(iv) இவ்வாறாக போலிச்சான்றிதழ்களைச் சமர்ப்பித்த எவரேனும் ஊழியர்கள் II ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்டதன் மூலம் இவர்களுக்கு நிவாரணமளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) இவர்களின் பெயர்கள் மற்றும் அடிப்படைத் தகைமைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இவ்விடயத்தின் போது அரச கொள்கைகளுக்கு இணங்கியொழுகாத வகையில் சிலரின் மனித உரிமைகள் மீறப்படும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அடிப்படைத் தகைமைகளின்றி அநீதிக்குள்ளாகியுள்ளவர்களுக்கு II ஆம் தரத்தைப் பெற்றுத்தருவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0308/ '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி பொலிஸ் நிலையத்திற்குச் சொந்தமான 60 ஸ்ரீ 6000 எனும் இலக்கமுடைய பயணிகள் பேரூந்து 2003.08.24 ஆம் திகதி எக்காரணத்திற்காக கொழும்பு வரை ஓட்டிச்செல்லப்பட்டதென்பதையும்,

(ii) அதில் பயணித்தவர்கள் யாரென்பதையும்,

(iii) பயணித்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பேரூந்து சம்பந்தப்பட்ட ஓட்டப்பதிவேட்டில் அன்றைய தினம் கையெழுத்திட்டவர் யாரென்பதையும்,

(ii) எக்கடமைக்காக அது ஈடுபடுத்தப்பட்டதென்பதையும்,

(iii) அன்றைய தினம் பேரூந்தை செலுத்திய சாரதியின் பெயர் என்ன வென்பதையும்,

(iv) பேரூந்தில் பயணித்தவர்கள் எவ்விடத்தில் கலந்து கொல்வதற்காக பயணித் தார்கள் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0458/ '08

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் யோதகண்டிய கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தில் உள்ள வயல்களின் அளவு எத்தனை ஏக்கர்,

(ii) அவற்றிற்கிடையில் பெரிய நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம், மானாவரி என்ற வகையில் பாசனம் பெறும் நிலத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் செய்கின்ற குத்தகை விவசாயிகளின் எண்ணிக் கை, பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவு யாது,

(ii) காணி உரிமையுடைய விவசாயிகளின் எண்ணிக்கையும் பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(iii) அது தவிர வேறு விவசாயிகள் இருப்பின் அவ்விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்திச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதன் பின்னர் 2007.12.31 வரையிலான காலப்பகுதியில் குத்தகை விவசாயி இறந்து போனதன் காரணமாக காணி உரிமை யாளருக்கும் பின்னுரிமையாளருக்கும் இடையில் தோன்றியுள்ள பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள குத்தகை விவசாயிகளின் பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) குத்தகை விவசாய உரிமை பெற்ற பின்னுரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0459/ '08

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பெரலிஹெல கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தில் உள்ள வயல்களின் அளவு எத்தனை ஏக்கர்,

(ii) அவற்றிற்கிடையில் பெரிய நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம், மானாவரி என்ற வகையில் பாசனம் பெறும் நிலத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் செய்கின்ற குத்தகை விவசாயிகளின் எண்ணிக் கை, பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவு யாது,

(ii) காணி உரிமையுடைய விவசாயிகளின் எண்ணிக்கையும் பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(iii) அது தவிர வேறு விவசாயிகள் இருப்பின் அவ்விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்திச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதன் பின்னர் 2007.12.31 வரையிலான காலப்பகுதியில்

குத்தகை விவசாயி இறந்து போனதன் காரணமாக காணி உரிமை யாளருக்கும் பின்னுரிமையாளருக்கும் இடையில் தோன்றியுள்ள பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள குத்தகை விவசாயிகளின் பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) குத்தகை விவசாய உரிமை பெற்ற பின்னுரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0460/ ’08

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வீரவில கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தில் உள்ள வயல்களின் அளவு எத்தனை ஏக்கர்,

(ii) அவற்றிற்கிடையில் பெரிய நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம், மானாவரி என்ற வகையில் பாசனம் பெறும் நிலத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் செய்கின்ற குத்தகை விவசாயிகளின் எண்ணிக் கை, பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவு யாது,

(ii) காணி உரிமையுடைய விவசாயிகளின் எண்ணிக்கையும் பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(iii) அது தவிர வேறு விவசாயிகள் இருப்பின் அவ்விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்திச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதன் பின்னர் 2007.12.31 வரையிலான காலப்பகுதியில் குத்தகை விவசாயி இறந்து போனதன் காரணமாக காணி உரிமை யாளருக்கும் பின்னுரிமையாளருக்கும் இடையில் தோன்றியுள்ள பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள குத்தகை விவசாயிகளின் பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) குத்தகை விவசாய உரிமை பெற்ற பின்னுரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2008, ஓகத்து 20, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0143/ '08

கௌரவ லக்ஷமன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 தேர்தலில் அரசாங்கம் அதிகாரத்தைப் பெறுவதற்கு முன் பாதுக்கை பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருந்த

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2004 தேர்தலில் அரசு அதிகாரத்தை ஏற்றதன் பின் பாதுக்கை பிரதேச செயலகப் பிரிவில் இன்றுவரை உள்ள

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபின் மேற்படி பிரதேச செயலகப் பிரிவுக்குள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்கள், விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை யென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0144/ '08

கௌரவ லக்ஷமன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 தேர்தலில் அரசாங்கம் அதிகாரத்தைப் பெறுவதற்கு முன் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருந்த

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2004 தேர்தலில் அரசு அதிகாரத்தை ஏற்றதன் பின் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவில் இன்றுவரை உள்ள

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபின் மேற்படி பிரதேச செயலகப் பிரிவுக்குள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்கள், விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை யென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0145/ '08

கௌரவ லக்ஷமன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 தேர்தலில் அரசாங்கம் அதிகாரத்தைப் பெறுவதற்கு முன் தெஹிவல — கல்கிஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருந்த

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2004 தேர்தலில் அரசு அதிகாரத்தை ஏற்றதன் பின் தெஹிவல — கல்கிஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவில் இன்றுவரை உள்ள

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபின் மேற்படி பிரதேச செயலகப் பிரிவுக்குள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்கள், விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை யென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0181/ '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பத்திரண,— விவசாய அபிவிருத்தி, கமத்தொழில் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இந்த நாட்டுக்குத் தேவையான சோயா போஞ்சியில் எந்தளவு இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்றது என்பதையும்,

(ii) 1987 மொடக்கம் 2007 வரை அந்தந்த வருடங்களில் எவ்வளவு சோயா போஞ்சி உற்பத்தி செய்யப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சோயா போஞ்சி செய்கைக்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்வதற்காக இருக்கும் அரச பண்ணைகளின் எண்ணிக்கையையும் அவை எவை என்பதையும்,

(ii) இந்த ஒவ்வொரு பண்ணைகள் மூலம் 1987 தொடக்கம் 2007 வரையிலான காலப்பகுதியில் எவ்வளவு சோயா விதை வருடாந்தம் உற்பத்தி செய்யப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) சிறந்த தரத்திலான சோயா போஞ்சி விதைகள் கிடைக்காமையினால் சோயா போஞ்சி செய்கையில் ஈடுபட்டிருக்கும் மக்கள் மிகவும் அசௌகரியத்துக்குள்ளாகியிருப்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) சோயா போஞ்சி செய்கை பின்னடைவு கண்டிருப்பின் சோயா போஞ்சி செய்கையை விருத்தி செய்ய எத்தகைய வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0182/ '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பத்திரண,— விவசாய அபிவிருத்தி, கமத்தொழில் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இந்த நாட்டுக்குத் தேவையான உருளைக் கிழங்கு எந்தளவு இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்றது என்பதையும்,

(ii) 1987 மொடக்கம் 2007 வரை அந்தந்த வருடங்களில் எவ்வளவு உருளைக் கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உருளைக் கிழங்கு செய்கைக்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்வதற்காக இருக்கும் அரச பண்ணைகளின் எண்ணிக்கையையும் அவை எவை என்பதையும்,

(ii) இந்த ஒவ்வொரு பண்ணைகள் மூலம் 1987 தொடக்கம் 2007 வரையிலான காலப்பகுதியில் எவ்வளவு உருளைக் கிழங்கு விதை வருடாந்தம் உற்பத்தி செய்யப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) சிறந்த தரத்திலான உருளைக் கிழங்கு விதைகள் கிடைக்காமையினால் சோயா போஞ்சி செய்கையில் ஈடுபட்டிருக்கும் மக்கள் மிகவும் அசௌகரியத்துக் குள்ளாகியிருப்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) உருளைக் கிழங்கு செய்கை பின்னடைவு கண்டிருப்பின் உருளைக் கிழங்கு செய்கையை விருத்தி செய்ய எத்தகைய வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0309/ '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அரசுக்குச் சுவீகரித்துக் கொள்ளப்பட்ட நெசவுக் கைத்தொழில் கூட்டுத் தாபனத்தின் துல்கிரிய நெசவுத் தொழிற்சாலை, அதன் ஊழியர்கள் காபுல் லங்கா கம்பனியில் இணைக்கப்பட்ட 1990.06.01 ஆம் திகதி தொடக்கம் இந்நிறுவனம் மாஸ் ஹோல்டின் கம்பனிக்கு விற்பனை செய்யப்படும் வரை மற்றும் அதன் பின்னர் இதுவரை சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்நிறுவனத்தைச் சேர்ந்த சகல ஊழியர்களினதும் தொழில் மற்றும் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் அரச தலையீட்டின் கீழ் நட்ட ஈடு செலுத்தி மீண்டும் தொழில் வழங்கும் அடிப்படையில் 1990.06.01ஆம் திகதி காபுல் லங்கா கம்பனிக்கும் அதன் பின்னர் 2006.07.31 ஆம் திகதி மாஸ் ஹோல்டின் நிறுவனத்திற்கும் துல்கிரிய நெசவுக் கைத்தொழிற்சாலை விற்பனை செய்யப்பட்டதென்பதையும்,

(ii) இருப்பினும் இதுவரை மீண்டும் தொழில் பெற்றுக்கொண்டவர்களுக்கோ சேவையிலிருந்து விலகிச் சென்றவர்களுக்கோ எதுவித நட்ட ஈடும் வழங்கப்படவில்லையென்பதையும்,

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) தனியார் மயப்படுத்தலின் ஆரம்பத்திலிருந்தே காபுல் லங்கா கம்பனியில் சேவையில் ஈடுபட்டிருந்து தற்போது ஓய்வு பெற்றுள்ள சகல ஊழியர்களுக்கும், 2003.09.11 ஆம் திகதி நிறுவனம் மூடப்படும் வரை இருந்த சகல ஊழியர்களுக்கும், 2006.07.31 ஆம் திகதி மாஸ் ஹோல்டின் கம்பனிக்கு விற்பனை செய்யப்படும் வரை இருந்த சகலருக்கும் குறிப்பிட்ட காலப்பகுதியில் கடமையாற்றுவதற்கான சேவை உரிமைகள் சார்பாகவும், முகங்கொடுக்க நேர்ந்த சிரமங்களுக்காகவும் வழங்கப்படவேண்டிய சகல கொடுப்பனவுகளையும் நட்ட ஈட்டுத் தொகையையும் பெற்றுக் கொடுப்பதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0310/ '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அநுராதபுரம் மாவட்டத்தின் தேசிய கால்நடை வளர்ப்பு அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான ஒயமடுவ மற்றும் பரசன்கன்வெவ ஆகிய பண்ணைகள் இந்திய தனியார் கம்பனியொன்றுக்கு 50 வருட குத்தகைக்கு வழங்கப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) பரசன்கன்வெவ மற்றும் ஒயமடுவ பண்ணைகளின் விஸ்தீரணம் வெவ்வேறாக எத்தனை ஏக்கர் என்பதையும்,

(ii) இங்கு பணிபுரிகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(iii) இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் என்ன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இவ்விரு இவ்விரு பண்ணைகளை இந்திய கம்பனிக்கு குத்தகைக்குக் கொடுப்பதற்கான காரணங்கள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு கூறுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0317/ '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மிஹிந்தலை இரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு நடவடிக்கைக ளுக்காக இடப்பட்டுள்ள தனியார் பாதுகாப்புச் சேவையின் பெயர் யாதென் பதையும்,

(ii) இப்பாதுகாப்புச் சேவையின் உரிமையாளர் யாரென்பதையும்,

(iii) 2004 ஆம் ஆண்டு இரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு நடவடிக்கை க்காக தனியார் பாதுகாப்பு கம்பனிகளிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iv) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களும் அவர்கள் சமர்ப்பித்த விலைகளும் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நோர்த் சென்றல் செக்கியுரிட்டி சர்விஸ் தனியார் நிறுவனம் இப்பல்கலைக் கழகத்திற்கு பாதுகாப்புச் சேவை வழங்கியுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில் அது எக்காலப்பகுதியில் என்பதையும்,

(iii) இப்பாதுகாப்புச் சேவையை மீளப்பெறாமைக்கான காரணம் யாதென் பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0461/ '08

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மீகஹஜந்துர கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தில் உள்ள வயல்களின் அளவு எத்தனை ஏக்கர்,

(ii) அவற்றிற்கிடையில் பெரிய நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம், மானாவரி என்ற வகையில் பாசனம் பெறும் நிலத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் செய்கின்ற குத்தகை விவசாயிகளின் எண்ணிக் கை, பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவு யாது,

(ii) காணி உரிமையுடைய விவசாயிகளின் எண்ணிக்கையும் பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(iii) அது தவிர வேறு விவசாயிகள் இருப்பின் அவ்விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்திச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதன் பின்னர் 2007.12.31 வரையிலான காலப்பகுதியில் குத்தகை விவசாயி இறந்து போனதன் காரணமாக காணி உரிமை யாளருக்கும் பின்னுரிமையாளருக்கும் இடையில் தோன்றியுள்ள பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள குத்தகை விவசாயிகளின் பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) குத்தகை விவசாய உரிமை பெற்ற பின்னுரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0462/ '08

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பதகிரிய கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தில் உள்ள வயல்களின் அளவு எத்தனை ஏக்கர்,

(ii) அவற்றிற்கிடையில் பெரிய நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம், மானாவரி என்ற வகையில் பாசனம் பெறும் நிலத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் செய்கின்ற குத்தகை விவசாயிகளின் எண்ணிக் கை, பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவு யாது,

(ii) காணி உரிமையுடைய விவசாயிகளின் எண்ணிக்கையும் பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(iii) அது தவிர வேறு விவசாயிகள் இருப்பின் அவ்விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்திச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதன் பின்னர் 2007.12.31 வரையிலான காலப்பகுதியில் குத்தகை விவசாயி இறந்து போனதன் காரணமாக காணி உரிமை யாளருக்கும் பின்னுரிமையாளருக்கும் இடையில் தோன்றியுள்ள பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள குத்தகை விவசாயிகளின் பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

